சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.**153 / 2016**

வாதி / பிரதிவாதி **பி.வா.சா.5**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி. T.திலகவதி அவர்களால் 44/1969 பிரிவின்படி **10.03.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | தனுஷ்குமார் | கிராமம் : | |
| த/பெ : | நடராஜ் | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் திருச்சி குடியிருந்து எலக்ட்ரீசன் வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். எனது தகப்பனார் பெயர் நடராஜன், எனது தகப்பனார் இறந்துபோயிவிட்டார். எனது தகப்பனாரின் கையெழுத்து எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.5-ல் உயிலில் உள்ள கையெழுத்துக்களில் எனது தகப்பனார் கையெழுத்தும் உள்ளது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். எனது தகப்பனார் 2019ம் ஆண்டு இறந்தார். மாதம், தேதி தெரியாது. எனது தகப்பனாரின் ஆதார் அட்டை எண், வாக்காளர் அடையாள அட்டையின் எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனார் எலக்ட்ரீசன் கடை வைத்திருந்தார். நான் திருச்சி அண்ணா நகரில் குடியிருந்து வருகிறேன். எனது வீட்டின் கதவு எண். 140/128. மேற்படி வீடானது எங்களுக்கு சொந்தமானது. அப்பாவின் கையெழுத்து எனக்கு எப்படி தெரியும் என்றால் விண்ணப்பங்களில் கையெழுத்து செய்த வகையில் எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.5 ல் கையெழுத்து எனது அப்பா கையெழுத்து போல் உள்ளதா என்றால் அது எனது அப்பா கையெழுத்து தான்.

ஐந்தாவது பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.